த.வெ.க. அரசின் அவலங்களில் இருந்து மக்களை திசைதிருப்ப

தி.மு.க. மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பழிபோடுகின்றனர்!

முன்னாள் அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ.1-

புதுக்கோட்டை தி.மு.க. வட்ட பிரதிநிதி விஜயகுமாரின் மறைவை தொடர்ந்து அவரது பட திறப்பு விழா புதுக்கோட்டை வடக்கு ராஜ வீதியில் உள்ள நகர் மன்ற வளாகத்தில் நடை பெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருமயம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான எஸ் ரகுபதி உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டு அவரது படத்தை திறந்து வைத்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில் :

திராவிட மாடல் ஆட்சியில் பொலிவுடன் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் மற்றும் வீரர்களுக்கு தேவையான உள் விளையாட்டு அரங்கத்தை தமிழ் நாடு முதலமைச்சர் திறந்து வைக்க வருகை தருவது திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தொடர்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. தவெக அரசு வெட்டியாகத் தான் பயணம் செய்து கொண்டு இருக்கிறது தவிர எந்த ஒரு புதிய திட்டங்களுக்கும் எதையும் கொண்டு வரவில்லை. பல் வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் செய்து பல் வேறு நிகழ்ச்சிகளை தொடங்கி வைக்கிறார் என்று சொன்னால் அது திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் அந்த சாதனைகளுக்கு திறப்பு விழா காணுகின்ற நிகழ்ச்சியை தான் இவர்கள் செய்து வருகின்றனர்.

விராலிமலையை பொறுத்த வரை இன்றைய சூழ்நிலையில் நிச்சயமாக தி.மு.க. உதயசூரியன் பிரகாசமாவதற்கான அனைத்து வேலைகளும் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள் விண்ணை முட்டும் விலைவாசி காணாமல் போய்க்கொண்டிருக்கும் சிறுமியர்கள் கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறும் காவல்துறையினர் இப்படிப்பட்ட அவல நிலையை தான் இந்த ஆட்சியில் கண்டு கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எதிர்பார்த்த மாற்றம் ஒன்று ஆனால் தங்களுக்கு ஏமாற்றம் தான் ஏற்பட்டுள்ளது என்பதை தமிழ்நாடு மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இதன் வெளிப்பாடாக விராலி மலை சட்டமன்ற தொகுதியின் வெற்றி அமையும். நிச்சயமாக வெற்றி காண்போம் அதற்கான அடிப்படை வேலைகளை தொடங்கி விட்டோம்.

விராலிமலை தொகுதியில் தி.மு.க.வில் இருந்து உள்ளடி வேலைகளை பார்த்தவர்களை வெளிப்படையாக தெரிவித்து த.வெ.க.வில் இணைத்துக் கொண்டுள்ளனர் அவர்களை வெளிப்படையாக காண்பித்ததற்கு த.வெ.க.விற்கு நன்றி. இனி துரோகிகளை வைத்துக் கொள்ள மாட்டோம். துரோகிகளை பக்கத்தில் வைத்துக் கொண்டு எந்த பணியும் செய்ய மாட்டோம். இங்கு இருந்து கொண்டே உலவு சொல்லிக் கொண்டே தான் இருந்தார்கள். இனி அந்த ஒற்றர்களுக்கு தி.மு.க.வில் வேலை இல்லை.

இந்த அரசு மடைமாற்றம் வேலையை செய்கிறது. இந்த அரசு அனைத்திலும் தோல்வி கண்டு விட்டது. இந்த அரசு நல்லாட்சியை தர முடியவில்லை அதனால் மக்கள் இந்த ஆட்சி மீது வெறுப்படைந்துள்ளனர். இதையெல்லாம் மடைமாற்றம் செய்வதற்காகத்தான் பல்வேறு வகையில் தி.மு.க. மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி பழி போடுகின்றனர் இதெல்லாம் நீதிமன்றத்தின் மூலம் தூள் தூளாகி விடும். அவர்களது முகத்திரை கிழிக்கப்பட்டு உண்மை வெளியே வரும்.

எத்தனை ஆவணங்களை வேண்டுமென்றாலும் அவர்கள் சொல்வார்கள் நீதிமன்றத்திற்கு சென்று நிரூபிக் கட்டும். ஏற்கனவே கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நில அபகரிப்பு வழக்கெல்லாம் போட்டார்கள் அந்த வழக்கெல்லாம்தூள்தூளாகி விட்டது. அதுபோல்தான் இதுவும் பெயரளவுக்கு 170 ஆவணங்களை கைப்பற்றி சென்ற தாக கூறுவார்கள். அதில் என்ன ஆவணங்கள் இருக்கும்.

தமிழ்நாட்டில் நடக்கும் பிரச்சனைகள் தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு செல்லவில்லைஎன்பதுநீரோ மன்னன் பிடில் வாசித்து கொண்டிருப்பது போன்ற கதை ஆகிவிடும் நிச்சயமாக அதிகாரிகள் நடக்கும் பிரச்சி னைகளை தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வார்கள் என்று நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

தலைநகர் கொலைநகராக மாறிக் கொண்டிருக்கிறது! பெண்கள், குழந்தைகள் முதல் 80 வயது முதியோர் வரை பாதுகாப்பற்ற நிலை!

உருட்டல், மிரட்டல்களுக்கு அஞ்சும் இயக்கம் தி.மு.க. அல்ல! எத்தனை வழக்குகள் போட்டாலும் சட்டரீதியாக எதிர்கொள்ளத் தயார்!

'திராவிட மாடல்' ஆட்சியில் ஒளிவெள்ளத்தில் இருந்த திருக்கோயில்கள் இன்று இருளில் மூழ்கியுள்ளன!

மகளிர் கண்டன ஆர்ப்பாட்டத்திற்குப் பிறகு – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, நவ.1-

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் புழக்கம், கடுமையான விலைவாசி உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு ஆகிய வற்றைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நேற்று (31.10.2026) தமிழ்நாடு முழுவதும் மாபெரும் மகளிர் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பெண்கள், குழந்தைகளுக்குப் பாதுகாப்பு எங்கே?

தமிழகத்தில் இன்று அக்கா, அத்தை, தங்கை என்று சொந்த உறவுகளுக்குள்ளேயே நம்பிக்கையும் பாதுகாப்பும் கேள்விக்குறியாகும் நிலை உருவாகியுள்ளது.

இரண்டரை வயது பிஞ்சுக் குழந்தைகள் கூட பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் கொடுமைகள் குறித்து செய்திகள் வருகின்றன. எண்பது வயது முதியோர்கள்கூட பாலியல் வன்முறைக்கு ஆளாகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.



தமிழகத்தின் தலைநகரான சென்னை, இன்று கொலைநகராக மாறிக்கொண்டிருக்கிறது. இத்தகைய சம்பவங்களைத் தடுக்கவும், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிய பாதுகாப்பை உறுதிசெய்யவும் இந்த அரசு தவறிவிட்டது.

38 இடங்களில் காட்டாற்று வெள்ளமெனத் திரண்ட மகளிர்!

இத்தகைய அவலங்களைக் கண்டித்துத்தான் எங்கள் உயிரினும் மேலான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ் நாடு முழுவதும் இலட்சக்கணக்கான மகளிர் நேற்று கண்டன ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றுள்ளனர்.

எங்கள் மாவட்டத்தில் மட்டும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர் திரண்டுள்ளனர்.

இதேபோன்று 38 இடங்களிலும் காட்டாற்று வெள்ளமென மகளிர் திரண்டு, இந்த ஆட்சிக்கு எதிராக வீதிக்கு வந்துள்ளனர். இது சாதாரண ஆர்ப்பாட்டம் அல்ல; மக்களின் வேதனைகளையும் மகளிரின் கோபத்தையும் வெளிப்படுத்துகின்ற மாபெரும் போராட்டம்.

மளிகைக் கடைகளுக்கும் மார்க்கெட்டுகளுக்கும் முதலமைச்சர் செல்லட்டும்!

தமிழகத்தில் கடுமையான விலைவாசி உயர்வு நிலவுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள்!

பாலங்களைச் சென்று பார்வையிடுகிறீர்கள். மின்வாரியத் தலைமையகத்திற்குச் சென்று பார்வையிடுகிறீர்கள். ஆவின் பாலகங்களுக்குச் சென்று பார்வையிடுகிறீர்கள். சென்னை மத்திய சிறைச்சாலைக்கும் சென்று பார்வையிடுகிறீர்கள்.

அதேபோன்று ஒருநாள் மளிகைக் கடைகளுக்கும், காய்கறி மார்க்கெட்டுகளுக்கும் சென்று பார்வையிடுங்கள்.

அங்கே பொருட்களை வாங்க வருகின்ற ஏழைத் தாய்மார்களின் குமுறல்களையும், குடும்பம் நடத்த முடியாமல் தவிக்கின்ற மக்களின் வேதனைகளையும் நேரில் கேளுங்கள்.

அப்போதுதான் விலைவாசி உயர்வால் மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்பது உங்களுக்குப் புரியும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இனிமேலும் இது போன்ற கொடுமைகள் நடைபெறாமல் தடுக்க வேண்டும். சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும்.

இவற்றை வலியுறுத்தித் தான், மக்களின் குரலுக்குச் செவிசாய்க்காத இந்த ஆட்சியாளர்களின் காதுகளில் கேட்கும் வகையில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை வழக்குகள் போட்டோ, கைது நடவடிக்கைகள் மூலமாகவோ, உருட்டல் மிரட்டல்கள் மூலமாகவோ பணியவைக்க முடியாது.

இந்த இயக்கம் எத்தனையோ அடக்குமுறைகளைச் சந்தித்தஇயக்கம். எத்தனையோ சிறைச்சாலைகளையும், வழக்குகளையும் எதிர்கொண்டு வளர்ந்த இயக்கம்.

எத்தனை வழக்குகள் வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளட்டும். அவற்றைச் சட்ட ரீதியாக எதிர்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திராவிட மாடல் ஆட்சியில் ஒளிவெள்ளம்! இன்று திருக்கோயில்களிலும் மின்வெட்டு!

எங்களைப் பற்றி விமர்சனம் செய்கின்ற நிர்மல் குமார், முதலில் தமது துறையின் அவலங்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நேற்று மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கு மேனாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் வந்தபோது மின்வெட்டு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று இந்திய நாட்டின் துணைக் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் வருகையின்போதும் மின் வெட்டு ஏற்பட்டதாகச் செய்திகள் வருகின்றன.

எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் திருக்கோயில் கள் அனைத்தும் ஒளிவெள்ளத்தில் திகழ்ந்தன.

ஆனால், இன்றைக்கு திருக்கோயில்கள்கூட இருளில் மூழ்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிர்வாகச் சீர்கேட்டிற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எங்களைப் பற்றிக் குற்றம் சுமத்துவதற்கு என்ன தகுதி இருக்கிறது?

நிர்மல் குமார் மீது வழக்கறிஞர் நியமனங்கள், அதிக விலைக்குப் பொருட்கள் கொள்முதல் செய்தல் உள்ளிட்ட பல் வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அவற்றுக்கெல்லாம் முதலில் அவர் விளக்கம் அளிக்க வேண்டும்.

தமது துறையின் குறைபாடுகளைச் சரிசெய்ய முடியாத வர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சிப்பதற்கு எந்த அருகதையும் இல்லை.

மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்து போராடுவோம்!

பெண்களின் பாதுகாப்பு, குழந்தைகளின் எதிர்காலம், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம், விலைவாசி உயர்வு, சட்டம்-ஒழுங்கு ஆகியவற்றில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இல்லையென்றால் மக்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தி திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கும்.

எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாமல், மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செயல்படும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து; விஜய் தான் பிரதமர், புஸ்ஸி ஆனந்த் உள்துறை அமைச்சர், ஆதவ் அர்ஜுனா நிதி அமைச்சர், ஜே.சி.டி.பிரபாகர் குடியரசுத் தலைவர் அப்படின்னு ஆசைப்படுவதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்.எல்.ஏ. சையத் பாருக் பாஷா என்பவர் பேட்டி கொடுத்திருக்கிறாரே! அதைப்பற்றி நீ என்ன நினைக்கிற ?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; ஒரு படத்துல டயலாக் ஒண்ணு வரும். "கொடுத்த காசுக்கு மேல என்னம்மா கூவறான்" அப்படின்னு. அது மாதிரி இருக்கு. இப்படி எல்லாம் சொன்னாலாவது தனக்கு மந்திரி பதவி அல்லது அதற்கு இணையான பதவி கிடைக்கும்னு நினைக்கிறார் போல. அது சரி! இந்த காங்கிரஸ்காரங்க அதே கூட்டணியில் தானே இருக்காங்க. அவங்க என்ன சொல்லப் போறாங்க. நல்லா தமாஷா இருக்குடி!

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(30.10.2026)



1. கடலூர் மாவட்டம் சிறுவத்தூர் கிராமத்தில் டைல்ஸ் ஒட்டும் தொழிலாளியை அடித்து கொலை செய்து கடற்கரை மணலில் புதைத்த கொடூரம்.

2. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே வார்ப்பட்டு கிராமத்தில் குடிபோதையில் தொந்தரவு செய்த கணவனை அடித்தே கொலை செய்த மனைவி.

3. தர்மபுரி மாவட்டம் பழைய இண்டூரில் மது குடிக்க பணம் தராததால் தாயை அடித்துக் கொலை செய்த கட்டிட தொழிலாளி.

4. விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகே பரங்கனி காதலை கைவிட மறுத்த பத்தாம் வகுப்பு மாணவியை கழுத்தை நெரித்து கொலை செய்த தந்தை .

5. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே நல்லான் பிள்ளை பெற்றான் கிராமத்தில் மது குடிக்க மனைவி பணம் தராததால் மகனை கிணற்றில் வீசி கொலை செய்த தந்தை.

6. சென்னை புளியந்தோப்பு ஆட்டுத் தொட்டி அருகே ஆட்டோவில் ரத்தம் சொட்ட சொட்ட துப்புரவு பணியாளர் பிணம் கிடந்ததால் பரபரப்பு , கொலையா ..?



7. தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் அருகே மூன்று வயது பெண் குழந்தையிடம் பாலியல் தொந்தரவு செய்து உடலை கடித்துக் குதறிய வாலிபர் சிக்கினான்.

8. சென்னை அமைந்தகரை பகுதியில் பள்ளிக்கு நடந்து சென்ற 16 வயது மாணவியை வழிமறித்து கட்டாய தாலி கட்டிய வாலிபர்.

9. சேலம் மத்திய பகுதியில் இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம கும்பல் அறிவாளால் சரமாரியாக வெட்டியதில் மூன்று பேர் படுகாயம்.

10. தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே புளியம்பட்டையில் அழகு நிலைய உரிமையாளர் வீட்டு பூட்டை உடைத்து 30 சவரன் நகை மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளை .



11. அரியலூர் மாவட்டம் தளவாய் கிராமத்தில் பொது இடத்தில் மது அருந்துவதை கண்டித்த இரண்டு போலீஸ்காரர்களை சரமாரியாக தாக்கிய போதை கும்பல்.

12. விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே நமஸ்கரித்தான் பட்டியல் விளம்பரப் பதாகை வைத்தது தொடர்பாக ஏற்பட்ட மோதலில் சரமாரியாக கற்கள் வீசி தாக்கியதில் இன்ஸ்பெக்டர் உட்பட 5 போலீசார் படுகாயம்.

13. திருப்பூரில் இரு மாநகராட்சி பள்ளி மாணவர்கள் இடையே கோஸ்டி மோதல், பேருந்து நிலையத்தில் இரும்பு கம்பி, கட்டைகள் ஆகியவற்றுடன் மோதி கொண்டதால் பரபரப்பு.

14. கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கூட்டடி கிராமத்தில் புழுக்கல் நிறைந்த , தரமற்ற ரேஷன் அரிசியை விநியோகித்ததால் , ரேஷன் அரிசி ஏற்றி வந்த லாரியை சிறை பிடித்த பொது மக்கள்.

15. தமிழ்நாட்டில் கனிமவள கொள்ளைக்கு அரசே துணை போகிறதா, நவம்பர் 1 முதல் 3 நாள் வேலை நிறுத்தம், மணல் லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்பு அறிவிப்பு.

ச.ராஜன் ஏற்பாட்டில்

46 'அ' வட்ட - கழக முன்னோடி மு. அண்ணாதுரை படத்திறப்பு!

ஆர்.டி.சேகர், க.ஜெயராமன், அ.முருகன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன் பங்கேற்பு!

சென்னை, நவ.1-

சென்னை வடக்கு மாவட்டம் 46 'அ' வட்டத்தைச் சேர்ந்த கழக முன்னோடி மறைந்த மு. அண்ணாதுரை அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (01.11.2026 - ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணி அளவில் எண்.155, 4வது தெரு ஜெ.ஜெ. நகர் 4வது தெரு, வியாசர்பாடி சென்னை-39 எனும் முகவரியில் நடைபெறுகிறது. அன்னாரது திருஉரு வப்படத்தினை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.



இந்நிகழ்வில் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க. ஜெயராமன், வடக்கு பகுதி செயலாளர் ஆ. முருகன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஆர். கமலக்கண்ணன், பகுதி செயலாளர் வேதா 46 அ வட்ட செயலாளர் ச. ராஜன், சி.ஆனந்தி, வை.கௌ தமன், வெ.இன்பரசன், கே.ஜெயராஜ், சி.சேனாதிபதி, இ.மணிகண்டன், பி. ஆனந்தி, பிரிட்ஜ் பி.பாலன், இ.கருணா, கே.பிரசாத், எம். ஜெயகிருஷ்ணன், கே.தமிழரசு, ஜி.செந்தில்நாதன், இ. மணிகண்டன், எம்.ஸ்ரீதர், ஜி.அன்பு ராஜ், எஸ்.பிரேமா, ஜி.கணேஷ், எம். அருண், டி.ராமு, டி. பாலு, சி.மகேந்திரன், ஆர்.மாரிமுத்து, ஏ. நசீர், டி.ரங்கநாதன், ஏ.ராஜன், எஸ். தாமோதரன், ஒய்.மகிமை ராஜ், எஸ். சங்கீதா, எஸ். வேளாங்கண்ணி உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு அன்னாரது படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை 46 அ வட்ட செயலாளர் ச.ராஜன் செய்துள்ளார்.





ஆர்.கே.நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் வெ.சுந்தரராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் தலைமையில் ஜே.ஜே.எபினேசர், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் ஆகியோர் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் அன்பகம்கலை, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், இரா.கிரிராஜன் எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்வில் தா.இளையஅருணா, ஜாரீம் இரா.மூர்த்தி ந.மனோகரன், என்.மருதுகணேஷ், பி.டி. பாண்டிசெல்வம், இரா.நரேந்திரன், நாகம்மைகருப்பையா, மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டம்

சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் என்.வெள்ளத்துரை அவர்களுக்குப் பதிலாக, மா.மதிமாரிமுத்து (1/427, பெருமாள் கோவில் தெரு, கரிவலம்வந்தநல்லூர், சங்கரன்கோவில், தென்காசி மாவட்டம்.) அவர்கள் சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 31.10.2026.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.